# மறுவின் உரை

பால்மாரியாகப் பொழிந்தது நிலவு; இருசாரியாக அமைந்த வீடுகளுக்கிடையே விசாலமான தெரு; தெருவென்றும் சொல்வதற்கில்லை. அது பொது ஜன ரஸ்தா அல்ல. அந்த வட்டாரத்திலிருந்த இருபது வீடுகளுக்கும் பொதுவான நிலா முற்றமாகி அமைந்த இடம் அது.

வாசலுக்கு வந்த ருக்மணி நீளக் கண்ணோட்டம் போட்டாள். முழுமதியின் எழில், நிலவின் அழகு, சூழ்நிலையின் இனிமை, காற்றின் குளுமை எல்லாம் பார்த்துச் சொக்கிவிட்டாள். வெற்றுக் கட்டிலை இழுத்துப் போட்டாள். அசதி அவளைப் படுக்கச் சொல்லிற்று. உடலைச் சாய்த்தாள்.

"ருக்கு! காரியமெல்லாம் ஆச்சா?" என்று கேட்டாள், பக்கத்து வீட்டு வாசலில் படுத்திருந்த மாமி.

"ஆச்சு, மாமி!"

"அம்மா வந்துவிட்டாள் உனக்கு ஓய்வு கிடைக்கும் பாவம்! ஆகிறது எட்டு - இன்னும் ஒரு மாசம்!"

மாமி பேச்சுக் கொடுக்கும்போது படுத்திருப்பது அடக்கக் குறைவாகப்பட்டதோ என்னமோ, ருக்கு எழுந்து விட முயன்றாள்.

"படுத்தாய் இப்போதான்! எழுந்திருக்க என்ன அவசரம்! அந்தப் பிள்ளை உள்ளே தூங்குகிறானோல்லியோ - மெள்ளப் போயேன் உள்ளே!" என்று அந்த அம்மாள் சொல்லிவிட்டதும், ருக்மிணி சந்தோஷமாய்ப் படுத்தாள் மீண்டும்.

"எப்படியோ ஊகித்து விடுகிறார் மாமி!" என்ற பாராட்டுடன் கண்களை மூடிக் கொண்டாள். எத்தனையோ பேர், எத்தனையோ பெண்கள், அந்த நடு வாசலில் படுத்துறங்குகிறார்கள்; ஆனால் அவள் மட்டும், மாறுதல் இல்லாமல் ஒரு நாளைப்போல தினமும் உள்ளே படுத்துக்கொள்கிறாள். மணிப் பயலுக்குத் துணையாக தினமும் வீட்டின் உள்ளேயே உறங்க சித்திரம் வேண்டியிருந்தது.

"இன்று முழுநிலா; நான் நிறைசூலி. என் விருப்பம், இன்று இந்த நிலவில் துயில வேண்டும். இதை எனக்கு மறுப்பது கூடாது!" என்று ஒரு வீம்பு ருக்மணிக்கு வந்தது. சலுகை எடுத்துக் கொண்ட பூரிப்பில் கண்ணயர்ந்துவிட்டாள்.

"ருக்கு! என்ன இது! போ. உள்ளே போய்த் தூங்கு! ருக்கு! எழுந்திரு!"

இந்தக் குரல் எழுப்பிய போது தான் உறக்கம் கலைந்தது. கணவன் ஈசுவரன்தான் எழுப்புகிறான்.

"பார்! குழந்தைக்கு ஆகுமா உடம்புக்கு? பத்து மணிக்கு . . . இந்த நிலாவில்? . . . உம், உம் எழுந்திரேன்!"

கண்களை மலர்த்தினாள் ருக்மணி. பக்கத்தில் படுத்திருந்த குழந்தையைப் பார்த்தாள். அவள் வயிற்றிலிருந்து வெளி வந்துவிட்டதா குழந்தை? இல்லை; பக்கத்தில் படுத்திருப்பவன் மணி. தூக்கத்தில் விழித்தாலும் அன்னையை நாடி அவள் படுத்திருக்குமிடத்திற்கு ஓடி வந்து ஒண்டிக் கொண்டு உறங்கும் குழந்தைகளைத் தெரியாதா ருக்குவுக்கு?.

கனிவுடன் பையனைப் பார்த்தாள். கணவன் வாசலில் படுப்பதற்காகப் போட்டுக் கொண்டிருந்த படுக்கையைப் பார்த்தாள். மெத்தையும் கொசுவலையும் படுக்க வா வாவென அழைக்கும் கவர்ச்சியுடன் துலங்கின; ஆனால் அந்தக் கவர்ச்சியைவிட அதிகமான சக்தி இருந்தது, கண்ணயர்ந்திருந்த சிறுவனிடம். வாரி எடுத்து தோளில் சார்த்திக் கொண்டு, விடுவிடுவென நடந்து வீட்டினுள் புகுந்தாள். அவள் பெறாத குழந்தைகள்தான் அவள் தோளிலும் வயிற்றிலும் கனத்தன. தோளின் மீது மணியும், வயிற்றினுள் கனியுமாக நடந்த அவள் உடல் சோரவில்லை. உள்ளம் தான் சோர்ந்தது. நிலாச் சாப்பாடு வேண்டாம், நிலாத்துயில் வேண்டும் என்பது அவளுடைய அற்ப ஆசை அது அவள் கணவனுக்குத் தெரியவில்லையே?

உள்ளே விரித்திருந்த பெரிய மெத்தையில் மணியைப் படுக்கப் போட்டாள். பக்கத்திலேயே அவளும் படுத்தாள். "எத்தனை நாழியாய்ப் படுத்திருந்ததோ! பூஞ்சை உடம்புப் பையன் என்ற கவனமே கிடையாது" என்று கணவன் சொல்லுவது கனவில் கேட்பது போல இருந்தது. வாசலில் கட்டில் வரிசையும், வான்வெளியில் நிறைமதியும் கனவுச் சித்திரம் போல தோன்றியது. "உனக்கும் எனக்கும் இந்த நாலு சுவர்களுக்கிடையேதான் படுக்குமிடம்" என்று குழந்தையிடம் சொல்லத் தோன்றிற்றோ என்னமோ, அவன் மேல் கைப்போட்டுக் கொண்டு லேசாக அணைத்தாள். மயக்க நிலைபோய் நல்ல துயிலில் ஆழ்ந்துவிட்டாள்.

ஈசுவரனுக்கு ஏன் இந்தப் பிடிவாதம்? வெளியில் படுக்க விரும்பும் சூலிக்கு ஏன் இந்த தடை போட்டான்?

தடை அவளுக்குத்தான், காரணம் மணி. மணியனுக்கு திடமில்லாத உடம்பு; நிலாத்துயில் அவனுக்கு ஒத்துக்கொள்ளாது என்பது அவன் அச்சம். ருக்மணிக்கு மட்டும் தெரியாதா? தெரியும்; தெரிந்தால் போதுமா? அவளுக்கு அக்கறை வேண்டுமே! இதுதான் அவன் எண்ணம், இரண்டு நாளைக்கு ருக்மணியை வாசலில் படுக்கச் சொல்லி, ஈசுவரன் மணிக்குத் துணையாகப் படுத்துக் கொள்ளலாம், வீட்டினுள். ஆனால் ஈசுவரனுக்கு அப்படிச் செய்யத் தோன்றுமளவு அக்கறை இல்லையே அவளிடம்?

ருக்மணி மணிக்கு மாற்றாந்தாய். மணியை பெற்றவள் போய்விட்டாள். மணியை மகனாகக் கருதி வளர்ப்பது ருக்மணியின் பொறுப்பு. பொறுப்பு வழங்கிய பணியை ருக்மணி வஞ்சனை இன்றி நிறைவேற்றினாலும், ஈசுவரன் மனத்தில் ஓர் உறுத்தலும் அவநம்பிக்கையும் இருக்கத்தான் இருந்தன. அவனுக்கு அத்தகைய மனநிலை இருப்பதும் இயற்கைக்கு மாறாகாது என்ற நினைப்பு ருக்மணிக்கு இருந்தது. மணிக்குத் தன்னிடம் வேற்றுமை இல்லா அன்பு உண்டாகிவிட்டது என்ற ஒரு உணர்வு அவளைத் தென்புடன் வைத்திருந்து, இங்கிதப் பெண்ணாக்கியது.

மறுநாள் காலை துயில் விழித்து எழும்போதே உடலில் அயர்வும் நோவும் உண்டாகிவிட்டன ருக்மணிக்கு. உள்ளத்திலும் என்னமோ ஏக்கமும் துக்கமுமாக இருந்தது. கொஞ்ச நாளாகவே அவளிடம் சற்றுக் கண்டிப்பும் கடுமையும் காட்டுகிறான் ஈசுவரன். கூடிய சீக்கிரமே இவளும் தன் வயிற்றுக் குழந்தையைப் பெற்றுவிட்டால், பிறகு மணியிடம் . . "ஐயோ .... அம்மா!......மா மா மா....... " என்ற கூக்குரல் கேட்டது.

"என்ன! என்னடா?" என கேட்டபடி எழ முயன்றாள் ருக்கு.

"நெருப்பூ... ஊ...." என்று அழுது கொண்டு வந்துவிட்டான் மணி. கை மணிக்கட்டில் தீக்காயம். பெரிதாகத்தான் இருந்தது தீயின் சுவடு.

"ஏண்டா அடுப்பண்டை போனாய்? எத்தனை தடவை சொன்னேன்? உம்! கேட்டால்தானே? இப்படி வா போக்கிரி!"

மணியைக் கடிந்து கொண்டே தேங்காயெண்ணெய் எடுத்துத் தீப்புண் மேல் தடவினாள். அவள் அறிந்த முதல் உதவி அதுதான். எண்ணெய் தடவிவிட்டு, கையை உதறி உதறி அவஸ்தைப்படும் சிறுவனை மடிமேல் இருத்திக்கொண்டு ஆசுவாசப்படுத்தினாள்.

"என்ன பண்ணினாய் அடுப்படியில்? விறகு நுனி பட்டுவிட்டது பார் - இப்படியாடா விஷமம்?" என்று கேட்டாள் அமைதியாக.

"விஷமம் பண்ணல்லே அம்மா! விளையாடினேன்!" என்று மணி மழலையில் பதிலளித்தபோது ருக்குவுக்குச் சிரிப்புத்தான் வந்தது.

"விளையாட்டு விஷமம் எல்லாம் ஒண்ணே தாண்டா உனக்கு! போக்கிரிப் பயல்! அப்பா பார்த்தால் கோபிப்பார் பார்!"

அவள் இப்படிச் சொல்லும்போதே வாசலில் செருப்போசை கேட்டது. ஈசுவரன் கையில் தினசரித் தாளுடன் வந்தான்.

"எதற்கு அப்பா கோபிச்சுப்பேனாம்?"

ருக்மணி சொன்னாள்; மணி கையையே காட்டி விட்டான். மணியின் கையைச் சுட்ட குறைக் கொள்ளிக் கட்டையைக் கூடப் பார்த்தான் ஈசுவரன். "உம், இந்தச் சின்ன வீட்டில் ஒரு பிள்ளை கண்ணுக்கெதிரில் சுற்றிக்கொண்டு விளையாடும்போதே கவனம் இப்படி இருக்கிறது! பெரிய பங்களாவாக. கண்ணுக்கு ஒதுக்கமாக இருந்துவிட்டால் இன்னும் எப்படித்தானிருக்குமோ?" என்று சுடுசொல் வீசி, ருக்குவின் மனத்திலே அது தாக்குவதைக் கவனிக்காமல் அப்பால் போனான் ஈசுவரன்.

வேதனையை விழுங்கினாள் ருக்மணி. கேட்க விரும்பினதையெல்லாம் அடக்கிவிட்டாள். கண்ணீர் கூடச் சுரந்துவிடாமல் கட்டுப்படுத்திக் கொண்டாள். "அம்மா அழுதாள்!" என்று மணி பிறரிடம் சொல்லிவிடக் கூடுமல்லவா?

சிறுபிள்ளை மணிக்குத்தானா அவள் நிலை தெரியப்போகிறது? அவன் தன்னுடைய தீப்புண் கையையும், தந்தையின் தீச்சொல் நாவையும் அம்மா மனத்தில் தீ நாக்குகள் போல கொழுந்துவிடும் உணர்ச்சிகளையும் ஒரே மாதிரிதான் மதித்தான். இரண்டே நாளில் ஆறக்கூடிய தீப்புண், அவனுடைய விஷம் விளையாட்டுக்களினால், ஆறாமல், கிளறிக் கொண்டு துன்பு வளர்த்தது. கட்டியிருக்கும் துணியை அவிழ்த்துக் கொண்டு விடுவான்; மண்ணும் நீரும் அந்தக் காயத்திலேயே பட்டு வினை வளர்த்தும், கொப்பளித்து விட்ட புண்மேல் மூங்கிற் சுழியைப் பட்டுக்கொண்டு வந்து அழுதான் ஒருநாள். தட்டு முட்டுச் சாமான்கள் குவித்திருந்த பலகை மேலிருந்த டப்பாவைக் கீழே உருட்ட முயன்று, பல பொருள்களைத் தள்ளினான். அவன் தலைமேல் விழுந்தது, கும்மட்டியின் தட்டு; உபயோகமற்றுப்போன பொருள்தான் அது - ஆனால் ஈசுவரனுக்கு, ருக்மணியைத் தாக்கப் பயன்பட்டது அது!

"அதிலே நெருப்பு இல்லாமல் போச்சே! புண்ணியம்!" என்று சொன்னான். இந்தப் பேச்சின் பொருள் ருக்மணியைச் சுட்டெரித்தது.

"அங்கே கொண்டுபோய் கும்மட்டியையும் நெருப்பையும் வைக்க எனக்குப் பைத்தியமில்லை! அவன் மேல் அது விழணும், அவன் சுட்டுக்கொள்ளணும் என்ற வன்மம் இல்லை! இப்படியெல்லாம் பேச வேண்டாம்!" என்று நாக்குழறச் சொன்னாள்; கண்களில் நீர்த்திவலையிட்டது. எத்தனையோ வினாக்களை நெஞ்சுடன் மாட்டி வைத்துப் பொறுத்துப் போனவள், இன்று குற்றச்சாட்டின் கடுமையைத் தாளாமல் கேட்டுவிட்டாள்.

ஆனால் இந்தக் கேள்வியைத்தானா அவள் கேட்டிருக்க வேண்டும்? அவனுடைய எதிர்த்தாக்குதலைக் கடுமையாக்கிவிட்டாளே?

"வன்மம் வேறே வேணுமா?" என்று தாக்கிவிட்டான் ஈசுவரன், கூசாமல்!

மகப்பேறு நாள் நெருங்க நெருங்க, ருக்மணிக்கு இனம் விளங்காத அச்சம் ஒன்று தோன்றி வளர்ந்தது. பிறந்தகத்திற்குப் போக, கணவனின் அனுமதியில்லை. அங்கு போவதானால், மணியை யார் கவனிப்பார்கள்? மகப்பேற்றின் சமயம் ஒரு மாதம் ருக்குவின் தாய் வந்து இருந்து தங்கி உதவினால் போதும் என்று சொல்லிவிட்டான்.

அன்னை உயிருடன் இருந்துங்கூட, ருக்குவுக்குக் கிடைக்கவேண்டிய ஆதரவும் உதவியும் கிட்டவில்லை. நோவு கண்டு வைத்தியச் சாலையில் போய் ஒண்டிக் கொண்டபோதுதான் தந்திச் செய்தி போய் அவளுடைய அன்னையை இழுத்து வந்தது.

புது மகவைப் பெண்ணுக்குக் காட்டினாள், தாய். "பார், உன் பிள்ளையை!" என்று தன் பாட்டி ஸ்தானத்தின் பூரிப்பை எல்லாம் திரட்டிச் சொன்னாள்.

"உம் . . . உம் . . ., பார்த்தேன்; கை கால் கண் மூக்கு எல்லாம் சரியாகத்தானேம்மா இருக்கு? ஒச்சம் கிச்சம் ஏதாவது . . . .."

"அசடு... போதுமே, ஒச்சமுமில்லை கிச்சமுமில்லை; சந்திரபிம்பமாயிருக்கு பிள்ளை.. உன் அகத்துக்காரர் வந்து பார்க்கட்டும். பூரிச்சுப் பேய்விடுவார்." தாயார் முறுவலித்தாள்.

பேசுவதற்கு அசதியாயிருந்ததால் ருக்மணி, தன் குழந்தையை உச்சி முதல் பார்த்துக் கொண்டு வந்தாள்.

ஆ! அந்தக் கை!

பிஞ்சுக் கரங்களில் ஒன்று . . .

"அம்மா!" என்று அழைத்தாள் ருக்கு.

"என்னம்மா ருக்கு, என்ன வேணும்?"

"இந்த வலது கையைப் பாரேன்! திட்டாக . . . கறுப்பாய் . . . இத்தனை பெரிசு, மச்சமா?"

"ஆமாண்டி! . . . பெரிய மச்சம் தான்! . . .வலது கை . . . புருஷப் பிள்ளை; அதிருஷ்ட மச்சம் தான். நான் பார்க்கவே இல்லையே!" என்று தாயார் வியந்தாள். பிறகு உடல் முழுதும் உற்றுப் பார்த்தாள். வேறு மறு இல்லை. ஈசுவரனும் மணியும் வந்தார்கள்.

"கை என்ன? காயமா? என்ற துடிப்புப் போலும், ஈசுவரன் குழந்தையின் கையைப் பார்த்தான். அதைக் கவனித்த ருக்மணி முறுவலுடன், "இது பிறவி மச்சம்! மணியின் கையிலிருக்கிற மாதிரியே-" என்று சொன்னாள்.

"மணி கையில் மச்சமா! தீப்புண்! . . . வாடா மணி, போவோம்!" என்று ஈசுவரன் போகப் புறப்பட்டான்.

மணிக்கு இன்னும் அங்கேயே இருக்க ஆசை. தந்தை கையைப் பிடித்துப் பற்றி இழுத்தபோது "ஊ" என்று முகஞ்சுளித்தான் மணி. தீப்புண் கையில், அந்த உறுதியான கைப் பிடிப்பு வலியுண்டாக்கிவிட்டது.

"இன்னுமாடா ஆறவில்லை!" என்று கேட்டுவிட்டு, ருக்மணியைப் பார்த்துவிட்டு, மைந்தனுடன் வெளியேறினான் ஈசுவரன்!

ருக்கு நெட்டுயிர்த்தாள்.

யாரும் பாராத நேரத்தில், ருக்மணி, தன் குழந்தையின் கைகளை எடுத்து முத்தமிட்டாள். கடியாரம் கட்டினாற் போல அதன் மணிக்கட்டிலே பிறவி மச்சம் இருப்பதும், 'அதிருஷ்ட மச்சம்' என்று தாய் குறிப்பட்டதும் மறக்கவில்லை. "என் கண்ணே! உன்னால் எனக்கும் அதிர்ஷ்டம் வரட்டுமடா!" என்று மானசீகமாகச் சொல்லிக் கொண்டாள்.

பொறுமை பயனற்றுப் போவதில்லை. நல்லியல்பினருக்கு நன்மை ஏற்படாமற் போவதில்லை.

இதுதான் மறு கூறும் உரை!

மனைவியைப் பார்த்துப் போக ஈசுவரனும், பாப்பாவைப் பார்த்து மகிழ மணியும் மீண்டும் ஒரு முறை வந்தனர். அப்போது, வைத்தியச் சாலையின் பிரசவப் பகுதியில் வளைய வந்துகொண்டிருந்தார் டாக்டர். அவர், தாயும் சேயுமாகப் படுத்திருந்த ருக்குவின் கட்டிலருகே வந்த போது, தந்தையும் தனயனுமாக வந்த ஈசுவரனையும் மணியையும் சந்தித்து சந்தோஷம் தெரிவித்தார். மணியையும் அவன் கையையும் பார்த்தார். கூர்ந்து பார்த்தார்.

"என்ன ஆச்சரியம்!" என்றார் திடுமென! தீப்புண் பட்டதிலிருந்து கை நீட்டிப் பழக்கப்பட்டு விட்ட மணி, பயப்படாமல், "பாப்பாக்கும் இருக்கு!" என்று சொன்னான் டாக்டருக்கு.

"பார்த்தேன்! அதுதான் ஆச்சரியப்படுகிறேன்! ஏன் சார், இது புண்ணோ . . .காயமோ . . . "

ஈசுவரனை முந்திக் கொண்டுவிட்டாள் ருக்மணி. "ஆமாம் டாக்டர், நெருப்புச் சுட்டுவிட்டது! எத்தனை நாளாச்சு, ஆறின பாடில்லை. பட்ட கையிலேயே பட்டுக் கொண்டு விடுகிறான். ஆறும் சமயத்தில் கிளறிக் கொண்டு விடுகிறது! நீங்கள் சொல்லுங்கள் கொஞ்சம் . . . "

"டாக்டர் சொல்லப் போகிற விஷயம் 'கொஞ்சம்' தானா? ருக்கு! . . கேள் . . . கேள்! . . . "

டாக்டர் கம்பீரமாகவும் கனிவாகவும் பார்த்தார் அவள் பக்கம். இளநரை படர்ந்திருந்த அவர் சிரம், அவளுக்கருகு துயிலும் மதலையின் அருகு குனிந்து, குஞ்சுக் கரம் பெற்றிருந்த மறுவைப் பார்த்தது.

“இதுதான்- இதுதான் . . . தாயுள்ளம் என்றால் இதுதான். இந்தப் பிள்ளையின் கை ஆறாமல் இருக்கிறதே என்று வேதனையுடன் அதையே கவனித்து வந்திருக்கிறீர்களா? அந்த நினைவே, அப்படியே முத்திரை போட்டுவிட்டது. வயிற்றுச் சிசுவிற்கு! அதே இடம், அதே வடிவம், அதே போலத்தான்! இது கடவுள் படைப்பில் உள்ள அற்புதம் - தாய் உள்ளத்தின் உயர்வு! என்ன சார் சொல்கிறீர்கள் நீங்கள்!”

டாக்டர் உணர்ச்சி வசப்பட்டுப் பேசிக் கொண்டிருந்தபோது ஈசுவரன் அவருடைய ‘அறியாமை’ யை எடுத்துக்காட்டத் துடித்தான், குறுக்கிட்டான்.

“சொன்னால் கோபிப்பீர்கள் சார்! இவன் அவளுக்கு நிஜப் பிள்ளையே அல்ல சார்! மூத்தாள் பையன்! தாய் உள்ளம் என்று சொல்லிவிட்டீர்களே! இவனுடைய தாய் இறந்து மூன்றாண்டுகளாகிறது!” என்றான் ஒரு குறும்புச் சிரிப்புடன்.

ஒரே வினாடி திகைத்துப் போய், உடனே சமாளித்துக் கொண்டார் டாக்டர்; ருக்மணியைப் பார்த்தார்; அவள் விழிகளில் வேதனையைப் பார்த்துவிட்டார். மணியின் தோள்கள்மேல் தம்முடைய கைகளை ஊன்றினார். மானிடர் சேவைக்குப் பயன்படும் கரங்களை அவன் மேல் ஊன்றினார். அவர் செயலின் ஆதரவு; நோக்கிலும் அன்பு; பேச்சிலும் அரவணைப்பு. “ஓ, ஐ ஸீ! இந்தப் பையன் ரொம்பப் பாக்கியசாலி! பெற்றவளுக்கு மேலே பாசமுள்ள தாயைப் பெற்றிருக்கிறான்! பிறந்திருக்கிற பயலும் லேசுப்பட்டவனில்லை சார்! அம்மாவின் பெருமையை நிலைநாட்ட வந்த பிள்ளை! இந்தப் பையனின் கையிலிருக்கும் பிறவி மச்சமே போதும்! அது உங்கள் குடும்பத்திற்குக் கடவுள் கொடுத்த ரட்சைதான்! என் தொழில் அனுபவத்தில் பல விந்தைகள், கடவுள் படைப்பில் விசேஷங்கள் பார்க்கிறேன்! இது ஒரு சிறப்பான அனுபவம் ஆயிற்று!” என்று சொல்லிக் கொண்டே அங்கிருந்து நகர்ந்து சென்றுவிட்டார் அவர்.

**********

(குமுதம், செப்டம்பர் 9, 1953)